**உலக வங்கி நிதியளிக்கப்பட்ட முதலீட்டு செயற்திட்டத்தின் தற்செயல் அவசரகால பதிலளிப்பு கூறின் தொகுப்பு ஏற்பாடு - 2022**

---

உலக வங்கி நிதியளிக்கப்பட்ட முதலீட்டு செயற்திட்டத்தின் தற்செயல் அவசரகால பதிலளிப்பு கூறின் தொகுப்பு ஏற்பாட்டின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2020 செப்தெம்பர் 08 ஆம் திகதிய 6371 எல்கே, 6228 எல்கே, 8878 எல்கே மற்றும் 6346 எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கைகளிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. சுகாதாரம், சமூக பாதுகாப்பு, விவசாயம், கல்வி மற்றும் போக்குவரத்துத் துறைகளை உள்ளடக்கி குறுகிய மற்றும் நடுத்தர கால தலையீடுகளுடன் கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையின் அரசாங்க பதிலளிப்பு மற்றும் மீட்புத் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கும் ICT தீர்வுகளைப் பயன்படுத்தி தொலைதூரத்தில் பொது சேவைகளை வழங்குவதற்கும் ஒரு தனியான அவசரகால செயல்நடவடிக்கைத் திட்டத்தைப் பயன்படுத்தி திறமையான மற்றும் ஒருங்கிணைந்த பதிலளிப்பை உறுதிப்படுத்துவதற்காக, கூட்டு இணை-நிதியளிப்பு அடிப்படையில் தனியான CERC தொகுப்புக் கணக்கில் மேலே கூறப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் தொகுதி நிதிகளின் CERC ஐ செயற்படுத்துதல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,491 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 56 மில்லியனானதுடன் அது ஆசிய அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 யூன் 17 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 மார்ச் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகளின் பயன்பாட்டுக் கூற்றையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிச் செயலாற்றல்**

**2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதி முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

<table>
<tr><th>இல.</th><th>கணக்காய்வு விடயம்</th><th>முகாமைத்துவத்தின் பதில்</th><th>கணக்காய்வாளரின் பரிந்துரை</th></tr>
<tr><td>(அ)</td><td>உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு விவசாய பயிர் உற்பத்தியை முதலாவது முன்னுரிமையாக இந்த செயற்திட்டம் அடையாளம் கண்டுள்ளது. எனினும், மொத்த நிதியேற்பாட்டில் 85 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 3,640 மில்லியன் தொகை கல்வி அமைச்சுக்காக வழங்கப்பட்டுள்ள அதேவேளை விவசாய அமைச்சுக்கான நிதியேற்பாடு ரூபா 264 மில்லியனாக இருந்தது, இது மொத்த நிதியேற்பாட்டில் 6 சதவீதத்தைக் குறிக்கிறது.</td><td>அறிக்கையிடப்பட்ட விவசாயத்திற்கான செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன,<br><br>(அட்டவணை கீழே)<br><br>நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, வளர்ச்சி குன்றிய மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்த்து, பாடசாலை வருகை மற்றும் கல்வி செயலாற்றலை அதிகரிக்கும் முயற்சியில், நாடு முழுவதும் உள்ள பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து சரிவிகித உணவை வழங்குவதற்கு உத்தரவாதம் அளிப்பது முக்கியமானதாகும்.<br><br>நாடளாவிய ரீதியில் 7,926 தேவையுடைய பாடசாலைகளில் 1,081,927 பிள்ளைகளுக்கு ஐ.அ.டொலர் 19.08 மில்லியன் தொகையை பயன்படுத்தி மதிய உணவு வழங்கும் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு ஆதரவை வழங்குவதற்கு CERC தொகுப்பு தீர்மானித்துள்ளது.</td><td>அனைத்து இலக்குகளையும் குறித்துரைத்தவாறு அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.</td></tr>
<tr><td>(ஆ)</td><td>மீளாய்வாண்டிற்கான நிதி முன்னேற்றத்தின் பிரகாரம் வெளிநாட்டு நிதி சார்ந்த கிரயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,283 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதியேற்பாட்டில் முறையே ரூபா 4,009 மில்லியன் மற்றும் ரூபா 1.2 மில்லியன் தொகையான</td><td>கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடி தற்போதைய மற்றும் நிலையற்ற சூழ்நிலையுடன் தொடர்புடைய அமுல்ப்படுத்தல் சவால்களை உருவாக்கியது. இதன் விளைவாக, 2022 திசெம்பர் 30 இற்குள் CERC தொகுப்பு மூடப்படும் நேரத்தில் CERC தொகுப்பின் கீழ் திட்டமிடப்பட்ட சில செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாத அபாயம் உள்ளது.<br><br>இதன் விளைவாக, ஐந்தொகையில் உள்ள ரூபா 707,594,230.00 தொகையான காசு மீதி</td><td>செயற்திட்ட நிதியை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கும் செயற்திட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.</td></tr>
</table>

| | | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா.(மில்) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா.(மில்) | மொத்தம் ரூபா.(மில் |
|---|---|---|---|---|
| 1. | விதை மற்றும் நடவு பொருட்களின் வழங்கல் | 2,101 | - | 2,101 |
| 2. | சேமிப்பு வசதிகளை வழங்குதல் | 116 | 264 | 380 |
| | | **2,217** | **264** | **2,481** |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாடுகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | பயன்படுத்தப்படாமல் இருந்தது. | |
| (இ) | விவசாயம், கல்வி, போக்குவரத்து, இடர் முகாமைத்துவம் மற்றும் பொதுத்துறை வீட்டு அடிப்படையிலான வேலைக்கான ICT தளம் என்பன செயற்திட்டத்தின் முன்னுரிமைகளின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும் ஐந்தொகையின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 708 மில்லியன் தொகை மேற்கூறிய செயற்திட்ட முன்னுரிமைகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடி தற்போதைய மற்றும் நிலையற்ற சூழ்நிலையுடன் தொடர்புடைய அமுல்ப்படுத்தல் சவால்களை உருவாக்கியது. இதன் விளைவாக, 2022 திசெம்பர் 30 இற்குள் CERC தொகுப்பு மூடப்படும் நேரத்தில் CERC தொகுப்பின் கீழ் திட்டமிடப்பட்ட சில செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாத அபாயம் உள்ளது. | செயற்திட்ட நிதியை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கும் செயற்திட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக இலக்கு மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் பின்வருமாறுள்ளது;<br><br>**செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக இலக்கு** — **பௌதீக முன்னேற்றம் (2022.12.31 இல் உள்ளவாறு)**<br><br>• வயல் பயிர்களுக்காக 102 களஞ்சியங்களை நிர்மாணித்தல் மற்றும் விதை உருளைக்கிழங்கு — 32 செயற்திட்டங்கள் இரத்து செய்யப்பட்டு, 4 செயற்திட்டங்கள் நிறுத்தப்பட்டன, 66 செயற்திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன, அதில் 36 களஞ்சியங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.<br><br>• 486 பாடசாலைகளுக்கு நீர் வழங்கல் — 313 பாடசாலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | முதன்மையாக விலைத் தளம்பல்களிற்கு வழிவகுக்கும் கடுமையான பொருளாதார மற்றும் நிதி நெருக்கடியின் தடையால் CERCs செயற்திட்டத்தின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவது மிகவும் மெதுவாக உள்ளது.<br><br>இதன் விளைவாக, விவசாயம் (களஞ்சியங்களின் நிர்மாணம்), கல்வி (தண்ணீர்/ சுகாதார வசதிகளை வழங்குதல்) மற்றும் போக்குவரத்து (சுகாதார வசதிகளின் நிர்மாணம்) தொடர்பான செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதமாகியிருந்ததுடன் சம்பந்தப்பட்ட IAS 2022 திசெம்பர் 31 இற்குள் எதிர்பார்த்த பௌதீக இலக்கை அடைந்துகொள்ளத் தவறியிருந்தது. | செயற்திட்டக் காலப்பகுதியின் போது செயற்திட்ட நோக்கங்களை அடைந்துகொள்ள வேண்டும் |

| | |
|---|---|
| • 881 பாடசாலைகளுக்கு சுகாதார வசதிகளை வழங்குதல் | 734 பாடசாலைகளில் சுகாதார வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| • 12 புகையிரத நிலையங்கள் மற்றும் 21 SLBT டிப்போக்களுக்கு சுகாதார வசதிகளை வழங்குதல் | டிப்போக்களில் 9 மலசலகூடங்களின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.<br><br>புகையிரத நிலையங்களில் 5 மலசலகூடங்களின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |